இயங்கி வருவதால், மேலூர் சட்டமன்றத் தொகுதி மேலூரில் தற்போது இயங்கிவரும் கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவ மனையாக தரம் உயர்த்தும் கருத்துரு அரசின் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 9-50)

2. தகவல் கோரல்.

அ. பேரவையின் முன் வைக்கப்பெற்ற நஞ்சப்பன் கமிஷன் அறிக்கை.

திரு. ரா. உமாநாத் : தலைவர் அவர்களே, சேலம் கிச்சிப் பாளையம் லாக்-அப் மரணம் சம்பந்தமாக என்கொயரி ரிப் போர்ட் இன்றைக்கு அவை முன் வைக்கப்பட்டு இருக்கிறது. செப்டம்பர் 30-ஆம் தேதியே அந்த அறிக்கை அரசுக்குக் கொடுக் கப்பட்டு இருக்கிறது. அதைப் பரிசீலித்து அரசு ஒரு ஜி. ஓ. வை 18 பிப்ரவரி 1984-ல் போட்டு இருக்கிறது. அதற்குப் பிறகு இந்த அவையில் வைப்பதற்கு $1\frac{1}{2}$ மாதகாலம் தாமதமாகியிருக் கிறது. அறிக்கை கிடைத்த 6 மாத காலத்திற்குள் அந்த அறிக்கை மீதான ஆணையை அரசு வெளியிடவேண்டும் என்ற அடிப்படை யில் பிப்ரவரியில் அரசு ஆணையிட்ட பின்பும் $1\frac{1}{2}$ மாதம் கழித்து இந்த அவையில் வைப்பதற்கான காரணம் என்ன ? இராமபிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை வெளிவந்த ஒரு சில மணி நேரத்திற் குள்ளேயே அரசு அதன் ரெகமென்டேஷனை அவையில் அறி வித்தது. அதேமாதிரி இதற்கும் செய்து இருக்கலாம் அல்லவா ? ஏன் இப்படி காலதாமதமானது என்பதைக்குறித்து அரசு விளக்கம் அளிக்குமா ? நாடு பூராவையும் ஒரு பரபரப்பில் ஆழ்த்திய ஒரு சம்பவம் பற்றிய அறிக்கையை இங்கே காலதாமதமாக வைக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உமா நாத் அவர்கள் கிளப்பியிருக்கிற பிரச்சனை பற்றிய முழு விவரமும் சொல்லுகிற நிலைமையில் நான் தற்போது இல்லை. அது பற்றி விசாரித்து என்ன நிலைமை என்று கண்டறிந்து, தக்க நேரத்தில் விளக்கம் தருகிறேன்.

1984 மார்ச் 29]

திரு. ரா. உமாநாத் : சபாநாயகர் அவர்களே, I am not casting aspersion. What I am saying is the Government must be ready to face anything ரிப்போர்ட் வைத்திருக்கிறபோது the Leader of the House says that he is not in a position to reply. Then who is responsible to the House. It is not fair also.

சில சந்தர்ப்பங்களில் ஒரு அமைச்சருக்குப் பதிலாக வேறு அமைச்சர் பதில் சொல்கிறார். கேட்டால் கலெக்டிங் ரெஸ்பான்சிபிலிட்டி இருக்கிறது என்கிறார்கள். அதைப்போல இப்போது ஏன் பதில் சொல்லக்கூடாது ? நீங்கள் கொஞ்சம் ப்ரொட்டக்ஷன் கொடுக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விசாரித்துச் சொல்கிறேன் என்று அவை முன்னவர் சொல்லியிருக்கிறாரே.

திரு. ரா. உமாநாத் : அரசாங்கம் ரிப்போர்ட் வைத்திருக்கிறது. கவர்ன்மென்ட் வைத்த ரிப்போர்ட்டுக்கே கவர்ன்மென்ட் பதில் சொல்ல முடியவில்லை என்றால் வேறு யார் சொல்வார் ? If it is done by somebody else, then I can accept the explanation given by the 'Avai Munnavar,

வேறு யாராவது செய்திருந்தால் விசாரிக்கலாம். இது அரசாங்கம் செய்தது. அரசாங்கம் வைத்த ரிப்போர்ட்டுக்கு அரசாங்கம்தான் பதில் சொல்ல வேண்டும். அவை முன்னவர் சொல்ல முடியவில்லை என்றால் சிஃப்மினிஸ்டர் வந்து சொல்லட்டும். Let the Chief Minister come and explain the position. He is here.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவை முன்பு நாள்தோறும் ஏராளமான அறிக்கைகள் வைக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு ஐயப்பாட்டைக் கிளப்பியதன் காரணத்தால் நான் அதுபற்றி விசாரித்து விவரங்களை அறியவேண்டியிருக்கிறது என்று சொன்னேன். ரிப்போர்ட் எப்போது வந்தது, தாமதம் ஏற்பட்டிருக்கிறதா ? ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்கான காரணம் என்ன ? அதிலே நியாயம் இருக்கிறதா இல்லையா என்ற விவரங்களை எல்லாம் அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. பதில் கிடைத்தால் உடனே சொல்லிவிடலாம். அதனால்தான் விசாரித்து, சொல்கிறேன் என்று குறிப்பிட்டேன்.

திரு. ரா. உமாநாத்: பதில் கிடைத்தால் என்று சொல்வது சரியல்ல. பதில் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பதில் கிடைத்தால் என்று அல்ல. சரியான நிலைமை தெரியவேண்டும். எப்போது ரிப்போர்ட் வந்தது ? எப்போது அச்சடிக்கப்பட்டது ? தாமதம் ஆகியிருந்தால் அதற்கு என்ன காரணம் ? சட்டப்படி இதிலே தவறு நடந்திருக்கிறதா என்பதை எல்லாம் முதலில் நான்

தெரிந்துக் கொள்ள வேண்டும். நான் ‘ எக்விப்டாக ’ இருந்தால் தான் கேள்விகள் கேட்கும்போது மறுபடியும் நான் பதில் சொல்ல முடியும். ஆகையால் தான் இப்போது பதில் சொல்லக் கூடிய நிலைமையில் இல்லை என்று சொன்னேன்.

திரு. ரா. உமாநாத் : நீங்கள் ‘ எக்விப்டாக ’ இருந்தால் தான் ரிப்போர்ட் வைக்கலாம். நீங்கள் தயாராக இல்லை என்றால் சீஃப்மினிஸ்டர் வந்து ‘எக்ஸ்பிளைன் பண்ணட்டும். சபாநாயகர் அவர்களே, இந்த அவையை இப்படி ட்ரீட் பண்ணக் கூடாது ; நீங்கள்தான் அவைக்கு கஸ்டோடியன், அவை இந்த 31-ந் தேதியோடு கலையப்போகிறது. அதன் பிறகு எப்போது சொல்வார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 31-ந்தேதியோடு கலைந்து விடவில்லை. 31-ந்தேதி ஒத்திவைத்து, மீண்டும் 9-ந்தேதி கூடுகிறது. ஏறத்தாழ மே 15-ந்தேதி வரையில் அவை நடக்க இருக்கிறது. உங்களுக்குப் பதில் கிடைக்கும்.

திரு. ரா. உமாநாத் : நான் ஒரு நியாயமான கேள்வியை எழுப்பியிருக்கிறேன். ஏற்கெனவே டிலே ஆகியிருக்கிறது. நம்முடைய சீஃப் மினிஸ்டர் இங்கே இருக்கிறார். அவர் விளக்கம் சொல்லட்டும். இந்த மாதம் 31-ந் தேதிக்குள்ளாவது பதில் அளிக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆறு மாதத்திற்குள் ரிப்போர்ட் வைக்க வேண்டுமென்று நினைக்கிறேன். அதை சட்டப்படி செய்திருக்கிறார்கள் என்றும் கருதுகிறேன். இருந்தாலும் விளக்கத்தைக் கேட்டு,அவைக்குச் சொல்லச்சொல்கிறேன்.

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. ப. நெடுமாறன் : தலைவரவர்களே, இந்த அவையிலுள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்களும், அவைக்கு வெளியே இருக்கிற தமிழக மக்கள் அத்தனை பேர்களும் அதிர்ச்சியடைகின்ற வகையில் இலங்கையிலிருந்து செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுபற்றி பலர் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். மற்ற உறுப்பினர்களுக்கு இருக்கிற உரிமையை நீங்கள் பறிக்கக்கூடாது. நாளை மறுநாள் அந்த ஒத்திவைப்புத்தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது அப்போது உங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம்.